# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10.* Ph. 0452 – 4354302

## கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு

**முன்னுரை:**

இன்றைய கிறிஸ்தவர்கள் கன்னிகைப் பிறப்பைப்பற்றி தங்கள் மனம்போனபடி பேசிவருகின்றனர். திருச்சபையின் ஆரம்பகால முதலே இதற்கு எதிர்ப்பு வளர்ந்து வந்துள்ளது. கிறிஸ்துவின் தெய்வீகத்தன்மைக்கு இது தேவையற்றது எனக்கூறி எபியோனியர் எனப்படும் ஒரு யூதமதப் பிரிவினர் இதை மறுத்து வந்துள்ளனர். **செரிந்தஸ்** என்பவரின் சீடர்கள் இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது கிறிஸ்து அவரில் வந்தார், பின்பு அவர் சிலுவையில் அறையப்பட்டபோது வெளியேறிச் சென்று விட்டார் எனக்கூறியுள்ளார். இன்னும் பலர் அவரது இயற்கையான அவதாரத்தையே மறுதலித்து வருகின்றனர். இன்னும் பலர் கன்னிகைப் பிறப்பின் வரலாறு ரோம, கிரேக்க மற்றும் பாபிலோனியப் புராணக்கதைகளைத் தழுவியது எனக்கூறுகின்றனர். கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு என்பது கிறிஸ்தவ விசுவாசத்திற்கு இன்றியமையாத ஒன்று. ஆனால் இன்றும் பலர் இதை மறுத்து வருகின்றனர். சுவிசேஷத்திற்காகப் போராட ஆயத்தமாக இருக்க விரும்பும் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்தவ விசுவாசத்தின் முதன்மையும், முக்கியமுமான இந்த சத்தியத்திற்காகவும் போராட ஆயத்தமாக இருக்க வேண்டும்.

### இந்தப் பாடத்தின் முக்கியத்துவம் :

தெய்வீகத்தின் இரகசியம் முழுமையும் இந்தக் கன்னிகைப் பிறப்பில் விரவியுள்ளது. இது கிறிஸ்துவின் தெய்வீகம், வேதவசனங்களின் முழுமைத்தன்மை மற்றும் இரட்சிப்பின் முழுத்திட்டம் இவை அனைத்தையும் உள்ளடக்கியுள்ளது. கிறிஸ்துவானவர் பரிசுத்தாவியினாலே உற்பவித்து கன்னிமரியாளின் கருவிலே அற்புதமாக உருவாகாமல் இருந்திருப்பாராகில், அவர் சுபாவ மனிதனுக்கு வித்தாகப் பிறந்திருப்பார். அவருக்குள் ஆதாமின் பாவசுபாவம் இருந்திருக்கும்! அதோடு அவருக்கு ஓர் ஆரம்பம் இருந்திருக்கும்!! அவர் தெய்வீக அவதாரமாக இருக்க முடியாது! அவர் மாசற்ற தேவ ஆட்டுக்குட்டியாகவோ, பாவிகளின் இரட்சகராகவோ இருக்கமாட்டாரே! கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் இன்றியமையாத, மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது இந்த கன்னிகைப் பிறப்பு எனலாம். நம்முடைய இரட்சிப்பும், நம்பிக்கையும் இதனைச் சார்ந்துள்ளன. இது மேலான சிகரம் போன்றது. எனவே பரிசுத்தவான்கள் யாவரும் இதைப்பற்றித் தெளிவாக அறிந்து, இதைப் பற்றிய ஆதாரச்சான்றுகளையும் தெள்ளத்தெளிவாக தெரிந்து நம்பிக்கையுள்ளவர்களாகவும், அதிலே நிச்சயமுள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ‘‘கன்னிகைப் பிறப்பை தள்ளுவது என்பது வேதவசனத்தை வெட்டி எறிந்து முடமாக்குவதற்கு ஒப்பாகும். இது ஆதிஅப்போஸ்தலரின் காலந்தொட்டு, தொடர்ச்சியாக திருச்சபை காத்துள்ள சாட்சியை முரண்படுத்துவதாகும். இது கிறிஸ்துவின் மனித அவதாரம் பற்றிய உபதேசத்தை பலவீனப்படுத்துவதாகும். அதோடு கிறிஸ்தவர்கள், தங்களை சாதாரணமாக மனுஷீகத்தன்மையுள்ள மத்தியஸ்தராகிய கிறிஸ்துவின் கைகளிலே ஒப்பிவித்ததுபோல இருக்கிறது’’ என்று **டாக்டர் ஜேம்ஸ் ஓர்** என்பவர் கூறியுள்ளார்.

**பாடம்**

**இந்தப் பாடம் நான்கு தலைப்புகளின் கீழே கொடுக்கப்படுகிறது :**

**1. முக்கியமான மறுப்புரைகள் 2. தீர்க்கதரிசனங்கள்**

**3. கிறிஸ்து முன்னமே இருந்தவர் 4. சான்றுகள்**

### I. முக்கியமான மறுப்புரைகள் :

கன்னிகைப் பிறப்பை குறித்து மாற்கு யோவான், பவுல் போன்றவர்கள் தாங்கள் எழுதிய நூல்களில் ஏன் எதுவுமே குறிப்பிடாமல் இருக்கின்றனர் என்பது மேலான வாதம். இதற்குப் பதில் :

**A 1. இந்தக் காரியம் ஒரு இரகசியமாக வைக்கப்படவில்லை :**

அ. யோவான்ஸ்நானகனின் தாயாகிய எலிசபெத்து இதை அறிந்து, ‘‘என் ஆண்டவனின் தாய்’’ என்று மரியாளை அவள் அழைத்தாள் (லூக்கா 1:43).

ஆ. மேய்ப்பர்கள் அந்தக் குழந்தை ஆண்டவராகிய கிறிஸ்து என்று அறிந்திருந்தார்கள் (லூக்கா 2:20).

இ. இயேசுவை ‘கர்த்தருடைய கிறிஸ்து’ என்று சிமியோனும், அன்னாளும் கூறியதை அங்கு ஆலயத்திலிருந்த மக்கள் யாவரும் கேட்டனர் (லூக்கா 2:25–28; 36–38).

ஈ. கிறிஸ்துவும் தம்முடைய ஆரம்பம் மற்றும் பிறப்பைக் குறித்துத் தெளிவாக அறிந்திருந்தார் என்பதை யோவான் 8:14,28,58 போன்ற வசனங்கள் மூலம் காணலாம்.

உ. மரியாளும், யோசேப்பும் ஆவிக்குரியவர்களாக இருந்து, இந்த உண்மையை தங்கள் நெருங்கிய நண்பர்களாக இருந்த சிமியோன், அன்னாள், சகரியா, எலிசபெத்து மற்றும் பலரிடம் கூறவேண்டிய கடமையுள்ளவர்களாக இருந்தனர்.

**2. மாற்கு இதைப்பற்றி ஏதும் கூறாதது ஏன்? :**

நாம் மாற்கு சுவிசேஷம் எழுதப்பட்ட நோக்கம் என்னவென்பதைக் காணவேண்டும். கிறிஸ்துவின் ஊழியத்தை வெளிப்படுத்துவதே மாற்குவின் நோக்கம். ஆகவே அவர் யோவானின் ஞானஸ்நானத்தோடு தம்முடைய சுவிசேஷத்தை ஆரம்பிக்கிறார். இயேசுவை ‘‘தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து’’ என்று அறிமுகப்படுத்தி தம்முடைய சுவிசேஷத்தை மாற்கு ஆரம்பிக்கிறார் (மாற்கு1:1). அவர் இதற்கு முன்னுள்ள விவரங்களைப் பற்றி கவலைப்படவில்லை. மேலும் அதற்கு மறுப்பு ஏதும் தெரிவிக்கவுமில்லை.

**3. யோவான் இதைப்பற்றி ஏதும் கூறாதது ஏன்? :**

வேதாகமத்தின் கடைசியாக இணைக்கப்பட்டது யோவானின் நூல்கள். அவர் இதை எழுதும்போது, மத்தேயுவும், லூக்காவும் ஏற்கெனவே இதைப்பற்றி எழுதியிருந்தனர். அதோடு ஆதித்திருச்பையின் விசுவாசப்பிரமாணத்தில் கன்னிகைப் பிறப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. ஆகவே அவர் இதை ஒதுக்கிவைக்கவில்லை. மரியாள் தன் வாழ்வில் இறுதிக்காலம் வரையும் யோவானின் வீட்டில்தான் வாழ்ந்தாள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது (யோவான் 19:26). நிச்சயமாக அவர்கள் இந்த மகிமையான செய்தியை யோவானிடம் கூறியிருக்க வாய்ப்பு உண்டு என்று நாம் கருதலாம். இயேசுகிறிஸ்து இயற்கை சுபாவத்தின்படி மனிதனாகப் பிறந்தார் என்று **செரிந்தஸ்** என்பவர் கூறியதை யோவான் மறுத்துள்ளார். யோவான் 1:13 கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் வசனம் என்று பலர் கருதுகின்றனர். எப்படியும் விசுவாசிகள் அற்புதமாக ‘‘தேவனால் பிறந்தவர்களாக’’ இருக்கும் போது கிறிஸ்துவின் பிறப்பு அதி அற்புதமாக இருந்திருக்கும் என்பது உறுதி. யோவான் 3:5,6–ல் ‘‘மாம்சத்தினால் பிறப்பது மாமம்சமாயிருக்கும். . . மறுபடியும் பிறக்க வேண்டும்’’ என்று யோவான் கிறிஸ்துவின் வார்த்தைகளை எடுத்துக்காட்டியுள்ளாரே! ஆகவே கிறிஸ்து மாம்சத்தின்படி பிறந்திருந்தால் அவர் பாவமுள்ளவராக இருந்திருப்பார். மறுபிறப்பு என்பது அவருக்கும் அவசியமாக இருந்திருக்குமே!

**4. பவுல் இதைப்பற்றி ஏதும் கூறாதிருப்பது ஏன்? :**

பவுல் மரியாளைக் குறித்தும் எதுவும் கூறவில்லை. மீண்டும் நாம் எழுதுபவரின் நோக்கம் என்னவென்பதைத் காணவேண்டும். பவுல், சிலுவையில் அறையப்பட்டவரும், உயிரோடு எழுந்தவரும், மகிமையில் உயர்த்தபட்டு, மறுபடியும் வரப்போகிறவருமான ஆண்டவரைப்பற்றி அறிவிப்பதையும், பிரசங்கிப்பதையும் விரும்பினார். கன்னிகைப் பிறப்பு உபதேசம் எல்லாராலும் ஆதித்திருச்சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இந்த உண்மையை ஒருபோதும் மறுதலிக்கவில்லை. கிறிஸ்துவாகிய அவரில் அவரது ஊழியத்தில், மரணத்தில், உயிர்த்தெழுந்ததில் கிறிஸ்துவின் தெய்வீக அவதாரம் முழுமையும் அடங்கியுள்ளது என்பது பவுலின் கருத்து. அதோடு பவுல் லூக்காவுடன் இணைந்து பல ஆண்டுகள் பயணம் செய்தார் என்பதையும் மறந்துவிடக்கூடாது. நிச்சயமாக இதைப்பற்றி அவர்கள் இருவரும் பேசியிருப்பார்கள் அல்லவா! பவுல் கிறிஸ்துவின் கன்னிகைப்பிறப்பைக் குறித்து எழுதாவிட்டாலும் அவர் கிறிஸ்துவைக்குறித்து கூறியிருப்பது என்னவெனில் :

அ. ‘‘இரண்டாம் மனுஷன் வானத்திலிருந்து வந்த கர்த்தர்’’ (2 கொரிந்தியர் 15:47).

ஆ. ‘‘தம்மைத்தாமே வெறுமையாக்கி.... மனுஷர் சாயலானார்’’ (பிலிப்பியர் 2:5–8).

இ. ‘‘தம்முடைய குமாரனை பாவ மாம்சத்தின் சாயலாக . . . . அனுப்பினார்’’ (ரோமர் 8:3).

ஈ. ‘‘காலம் நிறைவேறினபோது ஸ்திரீயினிடத்தில் பிறந்தார்’’ (கலாத்தியர் 4:4,5).

**குறிப்பு :**

மத்தேயு 11:11, லூக்கா 6:28 போன்ற வசனங்களில் ஸ்திரீயினிடத்தில் பிறந்தார் என்ற பதத்திற்கும், ரோமர் மற்றும் கலாத்தியர் நிருபங்களில் பவுல் கூறியுள்ள பதத்திற்கும் வேறுபாடு உண்டு. பிறந்தார் என்பதற்குப் பதிலாக ‘‘மாறினார்’’ ‘‘உருவானார்’’ என்ற பொருள்படும் பதத்தினை எழுதியுள்ளார்.

**B. 1. கன்னிகைப்பிறப்பு வரலாறு, பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் எழுதியதை தழுவி எழுதப்பட்டதாக இருக்கலாமோ என்று கூறுபவர்களுக்குப் பதில் :**

பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனங்களைத் தழுவி எழுதப்பட்டிருக்கலாம் என்பதற்கு ஆதாரமாக ஏசாயா7:14–ஐ குறிப்பிட்டுள்ளார்கள். இங்கு கன்னிகை என்பதற்கு ‘அல்மா’ என்கிற பதம் எபிரெய மொழியில் உள்ளது. இதற்கு மணமாகாத இளம்பெண் என்று பொருள். இது கன்னிகை என்று பொருள்படாவிட்டாலும் இது அப்பொருளில்தான்

எழுதப்பட்டது. பழைய ஏற்பாட்டில் இப்படி ஆறுதடவை வந்துள்ளது. இந்த ஆறுதடவைகளிலும் "கன்னிகை"யைக் குறிக்கும் பதமாகவே உள்ளது. அல்மா என்கிற பதம் திருமணமான பெண்ணைக் குறிக்கும்படியாக எங்கும் பயன் படுத்தப்படவில்லை. இயேசுகிறிஸ்துவின் காலத்தில் வாழ்ந்த யூதரோ, யூதஞானிகளோ இந்த வசனம் மேசியாவைக் குறிப்பது என்று கருத வில்லை. ஆகவே மத்தேயு கன்னிகைப் பிறப்பினை வலியுறுத்தியிருந்தாலோ அல்லது தீர்க்கதரிசனத்தைத் தழுவியதாய் இருந்தாலோ அவர்கள் அதைத் தள்ளிவிட ஏதுவுண்டு. உண்மையாய் இங்கு இது வேறுவிதமாக குறிப்பிடப்பட்டுள்ளது. கன்னிகைப் பிறப்பை நிரூபிக்க தீர்க்கதரிசனம் கூறப்படவில்லை. கூறப்பட்ட தீர்க்கதரிசனத்தை கன்னிகைப்பிறப்பு உறுதிப்படுத்துகிறது (மத்தேயு 1:22,23).

2. **கன்னிகைப்பிறப்பு புறஜாதியாரின் புராணக்கதையின் தழுவலாக இருக்குமோ என்று கூறுகிறவர்களுக்குப் பதில் :**

a. இயற்கைக்கு அப்பாற்பட்ட நிலையில் பிறந்தவர்களைப் பற்றிய புராணக்கதைகள் ரோம, கிரேக்க, பாபிலோனிய புராணங்களில் உண்டு.

b. புறஜாதியார் கன்னிகைப் பிறப்பினைக் குறித்துச் சந்தேகப்படமாட்டார்கள். ஏனெனில் அவர்களின் புராணங்கள் யாவும் தேவர் / தேவதைகளின் பிறப்புப்பற்றிய கதைகள் நிறைந்தவை என்று ஆதித்திருச்சபை பிதாக்கள் விவாதித்தனர். அவர்கள் புராணக்கதைகளை முற்றிலும் கட்டுக்கதைகளாகப் பாவித்தனர்.

அகஸ்டல் சீசர் அப்பொல்லோ என்ற கடவுள் பாம்பு வடிவில் வந்து தன் தாயினிடத்தில் இணைந்தபோது அவள் கருவுற்று தான் பிறந்ததாகக் கூறினான்.

மகா அலெக்சாந்தரும் கூட தான் ஒரு கடவுளுக்குப் பிறந்த மகன் எனவும், அக்கடவுள் பாம்பு வடிவில் தன் தாயுடன் குடியிருந்தபோது நடந்தது எனவும் கூறியுள்ளார்.

இந்த இருவரின் தாய்மாரும் **கன்னியர்கள் அல்ல** எனக் கூறத்தேவையில்லை.

c. புறஜாதியாரின் புராணக்கதைகளுக்கு வரலாற்றுச் சான்று ஏதும் கிடையாது. சுவிசேஷத்தில் கூறப்பட்டுள்ள ஆட்கள், காலம், சூழ்நிலை, இடம் நாள் மற்றும் பல்வேறு குறிப்புகள் யாவும் வரலாற்று ஆதாரமுடையன. புறஜாதியாரின் புராணக்கதைகள் வெறுமையான கட்டுக்கதைகள், ஆதாரம் இல்லாதவை, காலமற்றவை, வரலாறு இல்லாதவை.

d. கன்னிகைப் பிறப்பினைப் போன்ற வரலாற்று ஆதாரமுடைய சம்பவம் எதையும் அவர்கள் புராணக்கதையில் காண முடியாது. இந்த மனுக்குலம் முழுவதையும் பாவத்தினின்று மீட்டெடுக்க கன்னிகையின் மூலம் இவ்வுலகில் தேவன் மனிதனாக அவதாரம் எடுக்கவேண்டும் என்பது தேவன் தாமே தெரிந்துகொண்ட வழியாகும்.

e. இன்னும் சிலர் ரோமர், கிரேக்கர் எழுதிய கதைகளை மேற்கோள் காட்டியுள்ளனர். குறிப்பாக **ஹெர்மோஸ், தினேசியஸ்** போன்றோரின் கதைகளைக் கூறியுள்ளனர். ஆனால் அவர்களின் கதைகள் யாவும் இழிவானவை, கொடூரமானவை. பிளேட்டோவைப் போன்ற கிரேக்க, ரோம அறிஞர்கள் பலர் இக்கதைகளைக் குறித்து வெட்கமடைந்துள்ளனர். அதைத் தடைசெய்யவும் முயன்றனராம். அழகிய தூய்மையான வரலாறு படைத்த சுவிசேஷ செய்தியை எவ்விதத்திலும் இவைகளோடு ஒப்பிட்டுக்கூறவே முடியாது.

f. புத்தமதத்திலும் இது கூறப்பட்டுள்ளதா? கிறிஸ்துவின் காலத்தில் புத்தமதம் அவ்வளவாகப் பரவவில்லை. முதலாம் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களை அது அவ்வளவாக பாதிக்கவில்லை. பல நூற்றாண்டுகளுக்குப் பின்பே அவர்கள் புத்தரின் தெய்வீகப்பிறப்பைக் குறித்த ஒரு விநோதமான கதையினைக் கூறினர். புத்தரின் தாயார் ஒருநாள் இரவு அயர்ந்து தூங்கும்போது ஆறு தந்தங்களையுடைய வெள்ளை யானை ஒன்று அவளோடு இணைந்ததினால் கருவுற்று பத்து மாதங்களுக்குப் பின்பு புத்தர் பிறந்ததாகக் கூறினர்.

g. இக்கன்னிகைப்பிறப்பைப் போன்ற சம்பவம் ஒன்றையும் கீழ்நாட்டுப் புராணங்கள் எதுவும் கூறவில்லை, இயலாது.

h. புறஜாதியாரின் விக்கிரக வழிபாடு ஆதிக்கிறிஸ்தவர்களுக்கு மிகவும் அருவருப்பாக இருந்தது. இந்நிலையில் வேத எழுத்தாளர்கள் புறஜாதியாரின் கோட்பாடுகளைத் தழுவி வேதாகமத்தை எழுதினார் என்பது மூடத்தனமாகும்.

## II. தீர்க்கதரிசனங்கள்:

ஆதித்திருச்சபைப் பிதாக்களும், வேதஅறிஞர்களும், **கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு, அவரது தெய்வீகத்தன்மை** மற்றும் **அவரே மேசியா** என்பதற்கு ஆதாரமாக தீர்க்கதரிசனங்களை சார்ந்திருந்தனர். இந்த அணுகுமுறையை

தள்ளிவிட்டு கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு என்பது பிற்காலத்தே இணைக்கப்பட்டது என பலர் கூறினபோதும் நாம் தீர்க்கதரிசன வசனங்களைச் சார்ந்து நம்பிக்கையும், மகிழ்ச்சியும் பெறவேண்டும்.

அ. ஆதியாகமம் 3:15–ல் **"ஸ்திரீயின் வித்தாகிய"** அவர் சாத்தானின் தலையை நசுக்கி மீட்பைக் கொடுப்பவராகக் கூறப்பட்டுள்ளது.

ஆ. ஏசாயா 7:14–ல் **"ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள்"** என்று கூறப்பட்டுள்ளது. இந்த வாக்குத்தத்தமும், தீர்க்கதரிசனமும் தாவீதின் வம்சத்தாருக்கு (வசனம் 13) கொடுக்கப்பட்டது. தாவீதின் பரம்பரையில் மேசியாவானவர் தோன்றவேண்டும் (ரோமர் 1:5).

இ. ஏசாயா 9:6,7–பரிசுத்த ஆவியானவர் மிகவும் கருத்துடன் கன்னிகைப் பிறப்பினையும், கிறிஸ்துவின் தெய்வீகத்தையும் காத்துள்ளார். **"நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்"** பாலகன் **இயேசு பிறந்தார்,** ஆனால் குமாரனோ **பரலோகத்திலிருந்து வந்தார்.** இதேபோன்று லூக்கா 2:10–ல் **"கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்காக.... பிறந்திருக்கிறார்".** இதில் இயேசுவாகிய **இரட்சகர் பிறந்தார்,** ஆனால் கர்த்தராகிய கிறிஸ்து **பரலோகத்திலிருந்து வந்தார்** எனவும் கூறப்பட்டுள்ளது.

ஏசாயா 49:1,5–ல் கிறிஸ்து, தாயின் கர்ப்பத்திலிருந்தது முதல் "அழைக்கப்பட்டவராகவும், உருவாக்கப்பட்ட வராகவும்" கூறப்படுகிறார்.

ஈ. மத்தேயு 1:16–ல் "யாக்கோபு மரியாளுடைய புருஷனாகிய யோசேப்பைப் பெற்றான். அவளிடத்தில் கிறிஸ்து எனப்படுகிற இயேசு பிறந்தார்." யோசேப்பு கிறிஸ்துவைப் பெற்றான் எனக் கிரேக்க மூலப்பிரதிகள் எதிலும் கூறப்படவே இல்லை.

உ. மத்தேயு 1:22,23–ல் "தீர்க்கதரிசிகள் மூலமாகக் கர்த்தராலே உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இதெல்லாம் நடந்தது."

ஊ. லூக்கா 1:35– "உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும்."

**இந்தத் தீர்க்கதரிசனங்கள் யாவும் கன்னிகைப் பிறப்புக்கு மதிப்புக் கொடுக்க வேண்டும் என்பதற்காகவே பிற்காலத்தில் இணைக்கப்பட்டவை என்று வாதாடும் சிலருக்கு பதில் :**

1. நன்கு அறியப்பட்ட அப்போஸ்தலருடைய விசுவாசப்பிரமாணத்திற்கு முந்தின கி.பி. 100–ம் ஆண்டிற்கு முந்தின ரோமப் பிரமாணத்தில் அவர் பரிசுத்த ஆவியினாலே கன்னிமரியாளிடத்தில் பிறந்தார் என்று கூறப்பட்டிருக்கிறது.
2. "விசுவாசச் சட்டம்" என்று அறியப்படுகிற ஞானஸ்நான அறிக்கைகள் ஆதிசபைகளில் அநேக மாறுதல்களுக்கு உட்பட்ட போதிலும் அவைகள் அனைத்தும் "கன்னிகைப்பிறப்பை" ஏற்றுக்கொள்ளுகிறதாகவே இருந்தன.
3. கி.பி.100–ம் ஆண்டில் சபையானது கிறிஸ்துவின் மரணத்திலிருந்து 70 ஆண்டுகளே கடந்திருந்தது. சுவிசேஷம் அவர்கள் கையில் முப்பது ஆண்டுகள் இருந்தன. திருச்சபையில் பொறுப்புகள் ஒன்றன்பின் ஒன்றாக வளர்ந்தன. யாவரும் ஆரோக்கியமான உபதேசத்தையும், அப்போஸ்தல அதிகாரத்தையும் விரும்பினார்கள். இந்நாட்களில் அப்போஸ்தலனாகிய யோவான் உயிரோடு இருந்தார். இந்த சூழ்நிலையில் கன்னிப்பிறப்பை ஒத்துக்கொள்ள வைப்பதற்காக சபைகளில் ஆதாரமற்ற கட்டுக்கதைகளை யாரும் புகுத்தமுடியாது என்பதை நாம் அறியவேண்டும். உண்மையில் 'எபியோனியர்' என்றழைக்கப்படும் யூதக் கிறிஸ்தவக் கூட்டத்தினர் தவிர, சபைகள் அனைத்தும், எந்தவிதமான கேள்வியுமின்றி எழுதப்பட்ட கன்னிகைப்பிறப்பைப் பற்றிய வரலாற்றுச் சம்பவம் முற்றிலும் ஒப்புக் கொள்ளப்பட்டதாகவே இருந்தது.

## III. கிறிஸ்து முன்னமே இருந்தவர் :

கன்னிகைப்பிறப்பு உண்மை என்பதற்கு பெரிதான ரூபகாரம் என்னவென்றால், கிறிஸ்து ஏற்கனவே இருந்தவர் என்பதும், அவருடைய தெய்வீகமுமே ஆகும்.

அ. மீகா 5:2 "அவருடைய புறப்படுதல் அநாதி நாட்களாகிய பூர்வத்தினுடையது"

ஆ. எபிரெயர் 10:5–9 "ஒரு சரீரத்தை எனக்கு ஆயத்தம்பண்ணினீர்... தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்"

இ. யோவான் 17:5 "...... உலகம் உண்டாகிறதற்கு முன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்து மகிமையினாலே...."

ஈ. யோவான் 1:1,14 "ஆதியிலே வார்த்தை இருந்தது...... அந்த வார்த்தை மாம்சமாகி....."

உ. யோவான் 9:57–59 "ஆபிரகாம் உண்டாகிறதற்கு முன்னே நான் இருக்கிறேன்"

ஊ. கொலோசெயர் 1:17 "அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர்"

எ. பிலிப்பியர் 2:5–8 ''அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும்..... மனுஷர் சாயலானார்''

ஏ. **அவர் வந்தார்:** இவ்வுலகிலுள்ள மதத்தலைவர்களில் கிறிஸ்து ஒருவர் மட்டுமே தாம் தேவன் என்றும், நம்மைப் பாவங்களிலிருந்து மீட்டு இரட்சிக்கவே இவ்வுலகிற்கு தாம் வந்தார் எனவும் உரிமை கொண்டாடினார்.

1. எபிரெயர் 10:7,9 .. ''இதோ வருகிறேன்''
2. யோவான் 1:11 .. ''அவர் தமக்குச் சொந்தமானதிலே வந்தார்''
3. மாற்கு 10:45 .. ''மனுஷகுமாரனும்.... வந்தார்''
4. 1 தீமோத்தேயு 1:15 .. ''பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார்''
5. யோவான் 18:37 .. ''இதற்காகவே நான் இந்த உலகத்தில் வந்தேன்''
6. யோவான் 6:38,51 .. ''நான் வானத்திலிருந்து இறங்கிவந்தேன்''

''கிறிஸ்து மீட்பின் பணிக்கெனவே தம்முடைய சுயசித்தத்தின்படி வந்தார். அவரது செயலும், தெரிந்து கொள்ளுதலுமே அவரை மனுவுருவாக்கியது'' – H.C.C. Moule.

ஐ. **அவர் அனுப்பப்பட்டார் :** கிறிஸ்து வந்தார், அதோடு அவர் பரலோகத்திலிருந்து, பிதாவாகிய தேவனிடமிருந்து அனுப்பப்பட்டார்.

1. கலாத்தியர் 4:4,5 .. ''காலம் நிறைவேறினபோது... தம்முடைய குமாரனைத் தேவன் அனுப்பினார்''
2. யோவான் 3:17 .. ''..... அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்''
3. 1 யோவான் 4:14 .. ''பிதாவானவர் குமாரனை உலக இரட்சகராக அனுப்பினார்''
4. யோவான் 20:21 .. ''பிதா என்னை அனுப்பினது போல நானும் உங்களை அனுப்புகிறேன்''

**குறிப்பு :**

''தெய்வீகத்தை உருவாக்கவோ, உருக்குலைக்கவோ முடியாது.'' இப்பொழுது கிறிஸ்து தெய்வீகத்துவமுள்ளவராக இருக்கின்றார் எனில், எப்பொழுதும் அவர் தெய்வமாகவே இருந்தார். கிறிஸ்துவின் பிறப்பு அவரது ஆள்தத்துவத்தின் ஆரம்பமல்ல. மனித வாழ்வுக்குள் அவர் பிரவேசிப்பதையே காட்டுகிறது. கிறிஸ்துவின் தெய்வீகமும், அவர் முன்னதாகவே இருந்ததும் இயற்கைக்கு மேலான ஓர் பிறப்பிற்கு அவசியமாயிற்று. அல்லவெனில் அவர் பாவத்தில் உருவாகி மற்ற சாதாரண மனிதரைப் போன்று வாழ்ந்து தேவன் எனப்படுவதற்கு அருகதையற்றவராகியிருப்பார்.

## IV. சான்றுகள் :

**கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்புக்கென முடிவான வேறு சில சான்றுகள்:**

அ. மரியாள் ஒழுக்கக்கேடாக நடந்து குற்றமுள்ளவளாயிருப்பின் அவளைக் கொன்றிருப்பார்கள் (மத்தேயு 1:19).

ஆ. மரியாளும், யோசேப்பும் தாவீதின் வம்சத்தினர். கிறிஸ்து யோசேப்பின் மகனாகப் பிறந்திருந்தால், அவர் கோனியாவின் சாபத்திற்குட்பட்டவராக இருந்திருப்பாரேயன்றி மேசியாவாக இருந்திருக்கவேமுடியாது (மத்தேயு 1:11; எரேமியா 22:24–30).

இ. கிறிஸ்துவின் பாவமற்ற வாழ்வு, விசித்திரமான மரணம், உயிர்த்தெழுதல், பரிசுத்தாவியானவர் அவர்மேல் இறங்கி வந்தது, திரும்பி வருவேன் என்ற வாக்குத்தத்தம் போன்றவை புதிய ஏற்பாட்டை எழுதிய யாவரும் கிறிஸ்துவை முழுமையாக தெய்வீகத்தன்மை நிறைந்தவராகக் காண காரணமாயின.

ஈ. கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு, கிறிஸ்தவ விசுவாசத்திற்கு மிகவும் இன்றியமையாத ஒன்று என்பதை **ஆதித்திருச்சபை பிதாக்களும்,** முதல் இரண்டு நூற்றாண்டுகளில் வாழ்ந்த **இன்னாசி** (கி.பி.110), **அரிஸ்தர்தஸ்** (கி.பி.125), இரத்தசாட்சியான **ஜஸ்டின், ஐரேனியஸ்** (கி.பி.175) மற்றும் **தெர்த்துல்லியன்** (கி.பி.180) போன்ற யாவரும் முழுமையாக வலியுறுத்திக் கூறியுள்ளனர்.

உ. அப்போஸ்தலரின் காலத்தே மத்தேயு மற்றும் லூக்கா ஆகியோர் எழுதிய சுவிசேஷங்கள் நம்பத் தகுந்த ஆதாரப்பத்திரங்களாக இருந்தன. அவைகள் அதே முழுமைத்தன்மையுடன் நமக்கும் அருளப்பட்டுள்ளது.

**முடிவுரை :**

"இத்தனை நூற்றாண்டு காலமாக திருச்சபை இதைப்பற்றி தவறான கருத்தைக் கொண்டிருந்தால் அது ஒரு பெரிய, யாவருக்கும் தெரிந்த ஏமாற்று வித்தையாக இருக்கும் அல்லவா! கன்னிகைப்பிறப்பை எதிர்த்து வாதிடுபவர்கள் கீழ்கண்ட இருகாரியங்களுக்கும் பதில் காண வேண்டியவர்களாகவே உள்ளனர்."

1. கன்னிகைப் பிறப்பு, ஓர் ஆதாரமற்ற காரியமாக இருந்தால், அது இவ்வளவு வேகமாகப் பரவியது எப்படி?
2. இது வரலாற்று ஆதாரம் இல்லாதிருந்தால் இச்சம்பவத்தை ஆரம்பமுதல் யாவரும் ஏற்றுக்கொள்ள காரணமென்ன?

**பாவம்** என்கிற ஒன்று இவ்வுலகில் இருக்கிறபடியால் அதைப் **பரிகரிக்க பாவமற்ற, தெய்வீகத்தன்மையுள்ள ஓர் இரட்சகரை** நாம் பெறவேண்டும். அதற்கு ஒரேயொரு தெளிவான போதுமான விளக்கம், நமது அகில உலக திருச்சபை கொண்டிருந்த ஆதி விசுவாசமாகிய,

"**அவர் பரிசுத்த ஆவியினாலே உற்பவித்து கன்னிமரியாளிடம் பிறந்தார்**" என்பதே - W.H. கிறிப்த் தாமஸ்

**அல்லேலூயா! விந்தையான இரட்சகர்!**

<u>**குறிப்பு :**</u>

கிறிஸ்துவைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள்? இதுவே நாங்கள் உங்களிடம் கேட்க விரும்பும் கேள்வி. இதற்கு விடை உங்கள் அறிவினால் ஆராய்ந்து சொல்வதைவிட உங்கள் மறுபிறப்பின் அனுபவத்திலிருந்தும், உள்ளத்தின் ஆழத்திலிருந்தும் சொல்ல வேண்டும்.

இதுவரை நீங்கள் அவரை உங்கள் உள்ளத்தில் **இரட்சகராகவும், ஆண்டவராகவும்** ஏற்றுக்கொள்ளவில்லையெனில் இப்பொழுதே, தாமதமின்றி அவரை **ஏற்றுக்கொள்ளுங்கள்.**

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

# இயேசுகிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பு

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

இயக்குனர், *ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**(பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்படுத்தி தபாலில் அனுப்பவும்)**

**சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்**

1. இயேசுவானவர் யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிறந்திருந்தால் :
   a. அவர் தேவனாயிருப்பார்
   b. மற்றவர்களைப்போல அவரும் பாவியாக இருப்பார்
   c. ஒரு நிலையான தன்மையில் இருக்க முடியாது
2. இயேசுவானவர் கன்னிகையிலே பிறக்கவில்லை என்றால் :
   a. அவர் நமது இரட்சகராக இருக்கமுடியாது
   b. அவர் தொடர்ந்து நமது இரட்சகராக இருப்பார்
   c. நிலையான தன்மையில் அவர் பிறந்திருக்க முடியாது
3. மாற்கு ஆசிரியர் கிறிஸ்துவின் கன்னிகைப்பிறப்பைக் குறித்து எழுதவில்லை காரணம் :
   a. இது உண்மை என்று அவர் நம்பவில்லை
   b. இது ஒருவரும் பேசாத இரகசியமாகும்
   c. மத்தேயு, லூக்கா ஏற்கனவே எழுதியவைகளை தானும் திரும்ப எழுத விரும்பவில்லை
4. பவுல் கன்னிகைப் பிறப்பை நம்பினார் என்பதைக் காண்பிக்கும் வசனம் எது ?
   a. ரோமர் 12:1,2 b. கலாத்தியர் 6:1 c. கலாத்தியர் 4:4,5
5. கன்னிகைப் பிறப்பை ஏன் அநேக மக்கள் நம்புவதில்லை ?
   a. ஸ்திரீயின் மூலமாக மட்டும் ஒருவர் பிறக்கமுடியாது என்று எண்ணுகின்றனர்
   b. அக்காலத்தில் வாழ்ந்த கிரேக்க மற்றும் ரோம மக்களின் கட்டுக்கதை என்று எண்ணுகின்றனர்
   c. இதைப்போல ஒருவரும் இதற்கு முன் பிறக்கவில்லை என்று எண்ணுகின்றனர்
6. கிறிஸ்து கன்னிகையிலே பிறந்தார் என்பதைக் குறிக்கும் கி.பி.100–ம் ஆண்டிற்கு முந்தின உபதேச வாக்கியம் எது ?
   a. ரோம விசுவாசப் பிரமாணம் b. கிரேக்க விசுவாசப் பிரமாணம் c. விசுவாசப் பிரமாணம்
7. எந்த ஞானஸ்நான அறிக்கையில் ஆதித்திருச்சபை பேசிய கன்னிகைப்பிறப்பு இடம் பெற்றுள்ளது ?
   a. ரோம விசுவாசப்பிரமாணம்
   b. பவுலின் விசுவாசப்பிரமாணம்
   c. விசுவாச சட்டம் என்று அறியப்படுகிற
8. கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதவசனங்கள், கிறிஸ்து முன்னமே இருந்தவர் என்பதை எவ்விதம் நிரூபிக்கிறது ? (வசனத்தை எழுதாமல் வசனத்தின் அடிப்படையில் எழுதவும்)
   a. யோவான் 17:5 ------------------------------------------------------------------------------------------
   b. கொலோசெயர் 1:17 ------------------------------------------------------------------------------------------
   c. எபிரெயர் 10:5–9 ------------------------------------------------------------------------------------------

d. மீகா 5:2 ------------------------------------------------------------------------------------------

e. பிலிப்பியர் 2:5–8 ------------------------------------------------------------------------------------------

9. கிறிஸ்து பிதாவாகிய தேவனால் இவ்வுலகத்திற்கு அனுப்பப்பட்டவர் என்பதற்கு ஆதாரமாக **மூன்று** வேதவசனங்களை எழுதுக.

a. ------------------------------------------------------------------------------------------

b. ------------------------------------------------------------------------------------------

c. ------------------------------------------------------------------------------------------

10. யூதர்களின் திருமண முறைமையின்படி, இயேசு கன்னிகையிலே பிறந்தார் என்பதை எப்படி அறிந்துகொள்ளுகிறோம் :

a. திருமணமாகாத பெண் கர்ப்பவதியானால், தன்னை கொலைசெய்துகொள்வாள்

b. மரியாள் வேறொரு நபர்மூலமாக கர்ப்பவதியானால், அந்த நபரையே திருமணம் செய்துகொள்ளுமாறு யோசேப்பு மரியாளை வற்புறுத்துவார்

c. மரியாள் பாவம் செய்து கெட்டுப்போயிருந்தால், யோசேப்பு மரியாளைத் தள்ளி விட்டிருப்பார், விவாகம் செய்திருக்க மாட்டார்

11. **கோடிட்ட இடத்தை நிரப்புக:–**

கிறிஸ்து முன்னமே இருந்ததினாலும், அவருடைய தெய்வீகத்தன்மையினாலும் அவருக்கு கன்னிகை பிறப்பு அவசியம்.

காரணம் ------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

12. மற்ற தலைவர்களைப் பற்றியெல்லாம் சொல்லப்பட முடியாத எந்த ஓர் காரியம் கிறிஸ்துவைப்பற்றி சொல்லப்பட முடியும் ? (பாடத்தின் அடிப்படையில் எழுதவும்)

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------

13. கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பை நம்பாதவர்கள், எந்தக் கேள்விக்குப் பதில் கொடுக்க முடியாது ?

a. நடக்காததைக்குறித்து எப்படி நிரூபிப்பீர்கள் ?

b. வேதாகமத்தின் ஆசிரியரை நீங்கள் எவ்விதம் சந்தேகப்படலாம் ?

c. இது உண்மை இல்லையென்றால், அவரின் மரணத்திற்குப் பிற்பாடு, எப்படி இக்கருத்து உண்டாயிற்று ?

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________